9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ.) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள்— தொடர்ச்சி

(ஐ.)சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1981

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 51/1981)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.'' என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்டமுடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன் உள்ள கேள்வி—''பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்''.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

In clause 2,——

(a) for sub-clause (1), substitute the following sub-clauses, namely:——

"(1) in sub-section (1-A), for the expression "three hu and fifty rupees per mensem", the expression "four hu rupees per mensem, shall be substituted;

*1981ம் ஆண்டு மே மாதம் 11ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.